செ.வெ.எண்: 15 நாள்: 07.04.2017

# அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.

தமிழக அரசால் அரியலூர் மாவட்டத்தில் கால்நடைப்பராமரிப்புத் துறையின் மூலம் உடையார்பாளையம் வட்டத்தில் 100 ஏக்கர் பரப்பளவிலும், அரியலூர் வட்டத்தில் 50 ஏக்கர் பரப்பளவிலும் கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவன விதைகள் வழங்கப்பட்டு, பயன்பெறும் விவசாயி நிலங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் (06.04.2017) அன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்குத் தேவையான உலர் மற்றும் பசுந்தீவனங்களை தமிழக அரசு வழங்கிவருகிறது. இத்துடன் விவசாயிகள் தங்கள் நிலத்திலேயே பசுந்தீவனங்கள் உற்பத்தி செய்வதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு, அப்பயிற்சியின் மூலம் பயனடைந்த கூவத்தூர் ஊராட்சியில் கே.என்.குப்பம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு.சின்னப்பராஜ், த/பெ.அடைக்கலராஜ் என்பவர் தோட்டத்தில் அசோலா பெரணி வகையைச் சார்ந்த நீரில் மிதக்கும் தாவரத்தினை உற்பத்தி செய்து, மீன்கள் மற்றும் கால்நடைகளுக்கு வழங்கி வருகிறார். இத்தாவரத்தின் மூலம் கால்நடைகளுக்கும் மற்றும் மீன்களுக்கும் மிகக் குறைந்த விலையில் புரதச்சத்துமிக்க ஊட்டமான தீவனமாக வழங்கி வருகிறார். மேலும், கோடைகாலத்தில் மண்ணில்லா தீவன வளர்ப்பான ஹைட்ரோ போனிக் (Hydroponics) எளிய மண்ணில்லா பசுந்தீவன வளர்ப்பு முறை பயிற்சி பெற்றதன் மூலம் மக்காச்சோளம் மற்றும் சிறு தானிய பயிர்களை கொண்டு தீவனம் உற்பத்தி செய்து, கால்நடைகளுக்கு வழங்கி வருகிறார்.

மேலும், தேவனூர் ஊராட்சி கல்லுவெட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு.வடிவேல், த/பெ.ராஜமாணிக்கம் என்பவர் கால்நடைப்பராமரிப்புத்துறையின் மூலம் 3.00 ஏக்கர் நிலத்தில் வழங்கப்பட்ட பசுந்தீவன சோள விதை நிலத்தினை பார்வையிடப்பட்டு, சிறப்பாக செயல்பட விவசாயிகளுக்கு கருத்துரு வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, மண்டல இணை இயக்குநர் மரு.நசீர், கால்நடை உதவி மருத்துவர் மரு.செந்தில் மற்றும் கால்நடைத்துறை மருத்துவர்கள், அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.